விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஐப்பசி 28 ரபிஉல் 11 இதழ் 276

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 14 11 1986

வடமராட்சியில்

## படையினரைஎதிர்த்துபுலிகள் மூன்றுவது நாளாக கடும்சமர்

(நமது நிருபர்)

வடமாராட்சிப் பகுதியை ஆக்கிரமிக்கும் நோக்கமாக முன்னேறிக் கொண்டிருந்த முப்படைகளுடம் நேற்று 3 வது நாளாக தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகள் நேரடியுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இப்பகுதிகளில் நேற்று அதிகாலை தொடக்கம் இரு ஹெலிகொப்டர்களிலிருந்து துப்பாக்கிப்பிரயோகமும் ஷெல் தாக்குதலும் இடம்பெற்றன.

கடல் பகுதியிலிருந்து பீரங்கிப்படகுகள் பீரங்கி வேட்டுகளை தீர்த்தவண்ணமிருந்தன.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தொண்டமனாறு இராணுவ முகாம்களிலிருந்து குடிமனைகளை நோக்கி ஆட்டலறி ஷெல்களும் 5 அங்குல ஷெல்களும் ஏவிவிடப்பட்டன.

இதற்கு மத்தியில் முகாம்களிலிருந்து வெளிவந்த இராணுவத்தினருடன் விடுதலைப் புலிகள் உக்கிரமான மோதலில் ஈடுபட்டிருந்தனர்.

(7ம் பக்கம் பார்க்க)

● தமிழ்ப் போராளிகள் கைதானதைக் கண்டித்து —

# வன்னி, முல்லை மாவட்டத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

## பல்லாயிரம் மக்கள் மாட்டுவண்டில் உழவுயந்திரம் சகிதம் பங்குபற்றினர்

(நமது நிருபர்)

**தமிழ்ஈழவிடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனையும் ஏனைய போராளிகளையும் இந்திய மத்திய அரசின் பேரில் மாநில அரசு வீட்டுக்காவலில் வைத்துள்ளதை ஆட்சேபித்து முல்லைத்தீவு, தண்ணீருற்று, முள்ளியவளை நெடுங்கேணி ஆகிய பகுதிகளில் பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்றன.**

வவனியா பூவரசங்குளம், சாஸ்திரி கூளாங்குளம் ஆகிய பகுதிகளிலிருந்து புறப்பட்ட இரு ஊர்வலங்கள் கல்மடு பாடசாலையைச் சென்றடைந்தது.

விஸ்வமடு, முள்ளி வாய்க்கால் ஆகிய இடங்களிலிருந்து ஆரம்பித்த இரு ஊர்வலங்கள் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தைசென்றடைந்தது.

காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்த ஊர்வலங்கள், பிற்பகல் 3 மணியளவில் குறிப்பிட்ட இலக்கை சென்றடைந்தன

பல்லாயிரக்கணக்கான மக்களுடன் மாட்டு வண்டிகளும், உழவு இயந்திரங்களும் இந்த ஊர்வலங்களில் அணிவகுத்துச் சென்றன.

நெடுங்கேணியில் இராணுவத்தினரின் நடமாட்டம், எல்லைப்புறங்களில் ஊர்காவல் படைகளின் கண்காணிப்பு

(7ம் பக்கம் பார்க்க)

### ஹெலியிலிருந்து துண்டுப்பிரசுரம்

(நமது நிருபர்)

யாழ் நகரின் மேல் நேற்று மாலை வட்ட மிட்ட ஹெலிகொப்டர் ஒன்று, கொட்டடிப் பகுதியில் சிவப்பு வெளிச்சம் பரப்பி தாழப்பறந்தபோது, போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து ஹெலிகொப்டர் வானுயர எழுந்து

(7ம் பக்கம் பார்க்க)

போராளிகள் வீட்டுக்காவல்

## வாபஸ்பெறக் கோரி இன்று யாழ் நகரில் ஊர்வலம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் வே. பிரபாகரனும், ஏனைய தமிழ் போராளிகளும இந்திய அரசாங்கத்தினால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதை வாபஸ் பெறுமாறு கோரி இன்று யாழநகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நடைபெறவுள்ளது

யாழ் பெருமாள் கோயிலில் இருந்து காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு அனைத்து மக்களும் வேண்டப்பட்டுள்ளனர் (ஒ)

போராளிகள் இந்தியாவில் கைதுசெய்யப்பட்டமை

## விடுதலைப் போராட்டத்தை, ஈழ மக்களை அவமதிக்கும் செயல் -ஈ பி ஆர் எல் எவ்

யாழ்ப்பாணம், வெள்ளி

'ஈழ விடுதலை இயக்கங்களின் போராளிகள் இந்தியாவில் கைது செய்யப்பட்ட நடவடிக்கையானது ஈழ மக்களையும் விடுதலை இயக்கங்களையும் அவமதிப்பதாக உள்ளது, என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஈழமக்களின் பிரதிநிதிகளாக அங்கீகரித்து திம்புபேச்சு வார்த்தையில் கலந்துகொண்டதும், தொடர்ந்தும் சமா

(7ம் பக்கம் பார்க்க)

### யாழ் மாவட்டத்துக்கு 250 லட்சம் ரூபா

(அலுவலக நிருபர்)

87ம் ஆண்டு பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்துக்கு 250 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

(7ம பக்கம் பார்க்க)

தமிழ்ப் போராளிகள் மீதான இந்திய அரசின் நடவடிக்கை

## அரச பயங்கரவாதத்துக்கு வலுவூட்டுவதாக அமையும்

யாழ்ப்பாணம், வெள்

"சென்னையில் தமிழ்போராளிகள் கைது செய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளமை அரசாங்கம் மேற்கொண்டுவரும் பயங்கரவாத செயல்களுக்கு வலுவூட்டுவதாக அமைவதுடன் தமிழர்களின் நியாயமான உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தை இந்நடவடிக்கைகள் பலவீனபபடுத்தவும் செய்யும்.

தினமும் தமிழ்மக்கள் அரச படைகளினால் கொன்று குவிக்கப்படும் இவ்வேளையில் இந்திய அரசு தமிழ் போராளிகளை வீட்டுக்காவலில் வைத்திருப்பதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். எனவே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அனைத்துப் போராளிகளையும்

(7ம் பக்கம் பார்க்க)

தொண்டமனாறில்

## முன்னேறமுடியாதராணுவம் பல வீடுகளில் தஞ்சம்

வல்வெட்டித்துறை. வியா.

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து முப்படைத் தாக்குதலின் உதவியுடன் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியே வந்த இராணுவத்தினர் தொண்டமனாறு இராணுவ முகாம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது தொடர்ந்து செல்ல முடியாதவாறு போராளிகள் தாக்குதல் நடத்தினர்.

[7ம் பக்கம் பார்க்க]

### யாழ் போதனு வைத்தியசாலைக்கு பிரதமர் காந்தி மருந்துகள் அன்பளிப்பு

கொழும்பு, வியாழன்.

யாழ். போதனு வைத்தியசாலைக்கு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி 4 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய அத்தியாவசிய மருந்துவகைகளை அன்பளிப்புச் செய்துள்ளார்.

அத்தயாவசிய மருந்துவகைகளைக் கொண்ட இந்த பார்சலை கொழும்பில் உள்ள பதில் இந்திய உயர் ஸ்தானிகர் திரு. கே. ஆர். கிருதா போதனு வைத்தியசாலைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் டாக்டர் ஜெயசூரியா, யாழ். போதனு வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சி எஸ் நச்சினார்கினியர் ஆகியோரிடம் கையளித்தார்.

யாழ். போதனு வைத்திய

(7ம் பக்கம் பார்க்க)

● நாளை 15ம் திகதியை

## எதிர்ப்புநாளாக அனுஷ்டிக்க ஈரோஸ் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

எழுச்சிபெற்று வரும் மலையக மக்களின் போராட்ட உணர்வுக்கு ஆதரவாக வடக்கு கிழக்கு மலையகம் இணைந்த போராட்டத்தை முன்னெடுப்பதற்காகவும் நாளை 15ம் திகதியை எதிர்ப்புத்தினமாக அனுஷ்டிக்குமாறு ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) வேண்டுகோள் விடுத்துள்ளது.

இன்றைக்குகொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையை ஸ்ரீலங்கா அரசானது 1948 நவம்பர் 15-ம் திகதி மலையக மக்களின் குடியுரிமையை பறித்ததன் மூலமே தொடக்கி வைத்தது அதேவேளை நாட்டற்றவர்பிரச்னையை தீர்த்துவிட்டதாய் ஸ்ரீறிலங்காஅரசுகூறிவருகின்றது. ஆனாலும் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொடர்ந்தும் நாடற்றவர்களாகவே உள்ளனர். வாக்குரிமை அளிப்பதன் மூலம் மட்டும் இம்மக்களின் பிரச்னையைத் தீர்த்துவிடமுடியாது மாறாக அவர்களது வாழ்க்கையின அடிப்படையில் மாற்றம் காணப்பட வேண்டும் என்றும் இலங்கை

[7-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## வகுப்புக்கள்

108 Brown Road, A/L 88 அசேதன இரசாயனம் [(S. P, D தொகுப்பு] ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம்: 15-11-86 சனி 6-15 a m. சனி, ஞாயிறு 6-15 a m
(C5733)

## தேவை

அலுமினியம், பித்தளை வார்ப்பதற்கு நன்கு அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். Jaffna Technical Institute, 52/1, Stanley Road, Jaffna அல்லது இல 347, Stanley Road, Jaffna
(C 5758)

## சேவை

Lamination-உங்கள் படங்களையும் கல்வித் தராதரப் பத்திரங்களையும் பூச்சியில் இருந்தோ அல்லது காலத்தினால் வரும் அழிவில் இருந்தோ காப்பாற்றி தலைமுறை தலைமுறையாகப்பாதுகாக்கபொலி எஸ்டர் உறையில் நிரந்தரமாக சீல் செய்து வைக்க, தொடர்பு கொள்ளவேண்டிய இடம், ஞானம்ஸ் ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். அல்லது பதிநாதன், 118, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
C 5712

### யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரை)

மேற்படி சங்க 26-10-1986 விசேட பொதுக் கூட்டத்தில் தீர்மானித்தபடி பங்காளர்களின் கலந்துரையாடல் 420, ஆஸ்பத்திரி வீதி, காரியாலயத்தில் 16-11-86 ஞாயிற்றுக் கிழமை 10 மணிக்கு நடைபெறும்.

பங்காளர்கள் சமுகந்தரும்படி வேண்டப்படுகின்றனர்.
காரியதரிசி.
12-11-86
A 2866

## விற்பனைக்கு

கனரக மின் தளை யந்திரம் மறு சீரமைக்கப்பெற்ற யப்பான் லேத் யந்திரம் விற்பனைக்குண்டு பிள்ளையார். 257, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். [C 5757)

Show Case, கதிரைகள், தையல்மெஷின் (Singer Zig-Zag) T V, Dressing table, Kenwood Cooker, Cake mixer, Vono spring beds, Pyrex கிளாஸ் வகைகள் மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு 83/2, K K.S Rd, கொக்குவில் சந்தி.
C 5732

வேலணை கிழக்கு பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் தெற்குவீதி ஒழுங்கையில் 4½ பரப்பு வீடுகட்டுவதற்கு உரிய பனங்காணி விற்பனைக்கு உண்டு நேரில் தொடர்பு கொள்ளவும். கா. நடராசா நுணாவில் சந்தி, (அம்பாள் சனசமூக நிலைய முன்பாக மடத்தடி) சாவகச்சேரி. (C-5742)

நீரழிவு வியாதிகளுக்கு உகந்த வைத்தியர்களினால் சிபார்சு செய்யப்பட்ட கோதமை அரிசி குறுணல் விற்பனைக்குண்டு. M G M 777 K K S Road and 208, 1st Cross St, Jaffna. ரெலிபோன்; 22611. (C 5066)

மானிப்பாய் உடுவில் வீதியில் ஜேஸ் ரொபிக்கம்பனிக் கருகாமையில் இரண்டு கடைகளுடன் 5 பரப்பு வீட்டு நிலம் விற்பனைக்கு உண்டு மா. இராசரத்தினம், உடுவில்வீதி, மானிப்பாய். (C-5744)

தேநீர் கடைகளுக்குத் தேவையான Electric Boiler விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326. பிரதான வீதி சென் சாள்ஸ் பாடசாலை அருகில், யாழ்ப்பாணம். (C 5761)

Show case. Bread Slicer Coffee Perculator, கண்ணாடி மேசைகள், விருந்தைக் கதிரைகள், Singer தையல் மெஷின், கட்டில் மெத்தைகள், எழுது மேசைகள், Electric organ, கசற் றேடியோ, கிளாஸ் வகைகள், Dinner sets, Baby Pram, மற்றும் பல உடன் விற்பனைக்கு M தியாகராஜன், 326. Main Street (St Charles School near) Jaffna. (C5759)

வீட்டுத்தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, Floor Polisher, National Eleetric Boiler, Fans, English Stainless Steelபாத்திரங்கள், சாப்பாட்டு மேசைகள், அலுமாரி, Steel அலுமாரி Kenwood Mixer, Steel Bath Tub. ஹோல் செற். Baby Belling Cooker with Oven, கசற் றேடியோக்கள், M தியாகராஜன், 326, Main Street, சென் சாள்ஸ் பாடசாலை அருகில், Jaffna (C 5760)

அகில இலங்கை திருமுறை மன்றத்தினரால் வெளியிடப்பெற்ற திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளைத் தொடர்ந்து பல பேரறிஞர்களின் விளக்கவுரையுடனும் ஈழத்து. தமிழகத்தைச் சார்ந்த ஓதுவார்மூர்த்திகள் பாடியதுமான திருமுறைப்பாடல்களைக் கொண்ட பல ஒலிப்பதிவு நாடாக்கள், மேலும் சிறுவர், பெரியோர்களுக்கான பண்ணிசைப் பயிற்சி ஆகியவற்றை இன்று ஐப்பசி வெள்ளிக்கிழமையை முன்னிட்டு நல்லூர் சிவன் ஆலயம்முன் அமைந்திருக்கும் எமது தற்காலிக அலுவலகத்திலும் 31/12, சங்கிலியன் வீதி, நல்லூரிலும் பெற்றுக்கொள்ளலாம்
(C 5768)

### எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
தாமோதரம்பிள்ளை
அன்னம்மா
மறைவு:14-11-1978

தாங்கள் திடீர் என எங்களை எல்லாம் கண்ணீரில் ஆழ்த்தி விட்டு இறைவனின் திருவடி சேர்ந்து வருடம் எட்டு ஆகியும் தங்களின் இனிய நினைவுகள் எங்களின் உள்ளத்தில்என்றென்றும் நிலைத்து நிற்க இறைவன் அருள் புரியப் பிரார்த்திக்கிறோம்.

தங்களின் பிரிவால் மீளாத்துயருறும்: கணவர், பிள்ளைகள், மருமகன்கள், மருமகள், பேரப்பிள்ளைகள்.

நா. தாமோதரம்பிள்ளை,
224, ஈப்போ வீதி,
கோலாலம்பூர்.
C 5699

### 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
அன்னராணி
தேவசகாயம்
தோற்றம்: 25-10-1938
மறைவு: 14 11-1985
1-வது திருப்பலிப்பூசை
14 11-1986

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய் பொறுமைக்கு இலக்கணமாய்
எம்மை வழிநடத்தி வந்த குலவிளக்கே
இடைநடுவே நம்மை ஆருத்துயரத்தில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எம் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

அன்பு நினைவு கூறும்: கணவன், பிள்ளைகள், பெற்றோர், சகோதரர், உற்றார், உறவினர்.
C 5763

### 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. சி. சிங்காரவேலு
(முன்னாள் அலுவலக உதவி அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு)
பிறந்தமை:
14-03-1940
மறைந்தமை:
14-11-1984

ஆண்டுகள் இரண்டு-
நீங்கள் எமைவிட்டுப் பிரிந்து
ஓ... ... ... ...
எங்கள் இனியதலைவரே...
அறிவுக்கு அணிகலனாய்,
அன்புக்கு ஆசானாய்,
முல்லைநகர்ச் சேவகனாய்,
முத்தமிழின் பாவலனாய்
வாழ்ந்து... ...
கடமைக்காய் கொழும்பிற்கு ஏகும்போது,
எல்லாள தேசத்திலே...
மராதுகாலனாக...
இறைபதம் அடைந்தீரே.
அன்று முதல் இன்றுவரை
உங்கள் அன்பை......
தேனினிய குரலை தேடும்,
உங்கள் வழியொற்றிகளான...

மனைவி சி. புவனேஸ்வரி, மக்கள் சி. குமரவேள், சி தாரணி, சி. முருகவேள்.

பழைய இல. 383,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
C 5752

### வரைவுள்ள நெடுந்தீவு பல. நோ கூ. சங்கம்

யா — 1662— 5-12-1979

## வாக்காளர் இடாப்பு மூடுதல் 31-12-1986

இவ்வாண்டிற்கான வாக்காளர் இடாப்பு 31-12-86 உடன் மூடப் டுகின்றது. 12-01-82ல நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் 6வது தீர்மானத்தில் திருத்தம் செய்யப்பட்ட உபவிதி 18 (1) படி ஒரு பங்கின் பெறுமதி ரூபா ஒன்றில் இருந்து ரூபா பத்தாக (10/-) மாற்றப்பட்டுள்ளது. எனவே இதுவரையில் ரூபா பத்து (10/-) செலுத்தாமலுள்ள அங்கத்தவர்கள் மிகுதிப்பணத்தை செலுத்தி உங்கள் வாக்குரிமையை உறுதி செய்துகொள்ளவும் இதுவரையில் சங்கத்தில் அங்கத்துவம் பெறாமல் உள்ளவர்கள் ரூபா பத்து செலுத்தி அங்கத்தவராகி உங்கள் வாக்குரிமையை பெறும் வண்ணம் தயவாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஒப்பம்
இரா. தர்மலிங்கம்,
செயலாளர்
A 3098

### இலங்கை பல்கலைக்கழகம் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

## கல்வி பட்டப்பின் டிப்ளோமா- பகுதிநேர, முழுநேர கற்கை நெறி 1986/87

1986/87 கல்வி ஆண்டின் பகுதிநேர, முழுநேர கற்கை நெறிகளுக்குத் தெரிவசெய்யப்பட்டவர்களின் பெயர்கள் பத்திரிகைமூலம் அறிவிக்கப்பட்டது

தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு கடிதமூலம் அறிவிக்கபபடும். தெரிவுசெய்யப்பட்டவர்கள் இம்மாதம் 21-ம் திகதிக்கு முன்னர் யாழ் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்தல் வேண்டும். பகுதிநேர மாணவர்களுக்கு விரிவுரைகள் இம்மாதம் 22-ம் திகதியும் முழுநேர மாணவர்களுக்கு 24-ம் திகதியும் ஆரம்பமாகும்.

பதிவாளர்
(A 3096)

### கொக்குவில் இந்துக்கல்லூரி

## வருடாந்த பரிசளிப்பு விழா 1986.

நேரம்: பி. ப. 2·00மணி
காலம்: 18-11-1986
செவ்வாய்க்கிழமை
இடம்: கல்லூரிப் பிரதான மண்டபம்
பிரதம விருந்தினர்:
கலாநிதி சபா. ஜெயராசா
(யாழ். பல்கலைக்கழகம்)
பரிசில் வழங்குபவர்:
திருமதி பானுமதி ஜெயராசா

பெற்றோர், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
(தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப்படவில்லை)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
கொக்குவில் இந்துக்கல்லூரி.
(A 3099)

# ICMA

MAY 1987 EXAM.
NEW SYLLABUS
## AAT, IDPM, IAB,
JUNE 1987 EXAMS.
Weekend
## Courses Commencing from 6-12-86

விரிவுரையாளர் குழு:-
A. ஏரம்பு, K ஜெயரட்ணம், S. கதிர்காமநாதன், S. கைலாயபிள்ளை, யூஜின் மரியாம்பிள்ளை, சுந்தையா நவரேந்திரன், S P. சிவபாதசுந்தரம், R N. வரேந்திரன்

## Free of Charge

Application forms for registration with the respective examination bodies including guidance and assistance regarding selection of courses provided to students

We were the leaders, still we are;
வகுப்புக்கள் பாதுகாப்பான இடத்தில்;

## CANTABIA INSTITUTE

(Shoot of Oxonia Colombo.)
21, MAIN STREET, JAFFNA.
'Phone: 24201
[A 2871]

## சூழல் பாதுகாப்பு: ரோம் நகரில் வாகனங்கள் மீது

# இத்தாலிய நீதிபதி எச்சரிக்கை!

ரோம், நவ 13

**உலகின் மிகப்பழமைவாய்ந்த நகரங்களில் ஒன்றான ரோம் நகரைப் பாதுகாக்கும் வகையில் இத்தாலிய நீதிபதி ஒருவர், இந்நகருக்குள் நுழையும் மோட்டார் வாகனங்களுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்நகருக்குள் வாகனங்கள் பிரவேசிப்பது தடைசெய்யப்படும் என்பதே அந்த எச்சரிக்கையாகும்.**

ரோம் இத்தாலியின் தலைநகராகும். இந்த நகரம் சர்வதேச விவகாரங்களுக்கும் முக்கியம் பெற்றதாக விளங்குகின்றது. இதனால் இங்கு மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துக் காணப்படுகிறது. இந்த அதிகரிப்புக் காரணமாக சுற்றுடல் மாசடைந்து ரோமின் புராதனச் சின்னங்கள் பாதிக்கப்படுவதுடன் இந்நகரின் வரலாற்று ரீதியான அழகைக் கெடுக்கும் வகையில் வாகனங்களும் அதிகரித்துள்ளன.

இதனையடுத்தே இத்தாலிய நீதிபதி ஒருவர் மேற்கண்ட எச்சரிக்கையை ரோம் நகர வாகனச் சாரதிகளுக்கு விடுத்துள்ளார்.

தமது எச்சரிக்கைக்கு மதிப்பளித்து ஏழு தினங்களில் ரோம் நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை 60 சதவீதமாகக் குறைக்கப்படாதவிடத்து துப்பாக்கி ஏந்திய பொலிசாரைப் பயன்படுத்தி வாகனக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளப் போவதாக அந்நீதிபதி கூறியுள்ளார்.

பழமையைப் பேணும் வகையில் குறுகலான நடைபாதைகளையும், ஒடுக்கமான சாலைகளையும் கொண்டுள்ள ரோம் நகரம் அதன்பொலிவை இழக்கக்கூடாதென்பதே அந்நீதிபதியின் விருப்பமாகும்.

ரோம் நகரின் சுற்றாடல் பாதுகாப்பு அளவையும் மீறியதாக சூழல் மாசடைவை ஏற்படுத்தும் காரணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், 'அசிட்' இரசாயன மழை வீழ்ச்சியினால் பல பிரதான சின்னங்கள் இந்நகரில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

உலகச் செய்திகள்

## ஆஸ்பத்திரியில் நால்வர் அனுமதி

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமராட்சிப்பகுதியில் நேற்று முன்தினம் நடந்தஷெல்ஹெலி தாக்குதலில் காயமடைந்த நால்வர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களின் விபரம் கே குலசிங்கம் (34 வயது) கரவெட்டி, அப்பன் (வயது 20) யாழ்ப்பாணம், டயஸ் (17 வயது) யாழ்ப்பாணம், பூபதி 23 வயது) யாழ்ப்பாணம்.

காயமடைந்த மற்றும் சிலர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [இ]

## நீதிபதி உயிர் தப்பினர்

பருத்தித்துறை, வியா.

புலோலியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஷெல் குண்டுத் தாக்குதலில் இருந்து யாழ் நீதிமன்ற நீதிபதி எஸ். ஆனந்தராசா மயிரிழையில் உயிர் தப்பினர்.

இங்கு நடந்த தாக்குதல்களினால் இவரது வீடும், புலோலி உப அலுவலகம் என்பனவும் பலத்த சேதமடைந்துள்ளன.

## திருமூலர் குருபூசை

யாழ்ப்பாணம், வியாழன்

கரம்பன் குருமடத்தில் இன்று திருமூலர் குருபூசைநடைபெறவுள்ளது

இந்தப் பூசையையொட்டி மாணவர்களுக்கான செய்யுள் மனனப்போட்டி இடம்பெறவுள்ளதுடன் பரிசு வழங்கும் வைபவமும் இடம் பெறும்.

## மஷேல் விமான விபத்துக்கு தென்னாபிரிக்கா பொறுப்பு

மாஸ்கோ, நவ 13

கடந்த மாதம் மொசாம்பிக் ஜனாதிபதி சமோரா மஷேல் விமான விபத்தில் கொல்லப்பட்டமைக்கு தென்னாபிரிக்காவே முழுப் பொறுப்பாகும் என்று சோவியத்யூனியன் அறிவித்துள்ளது.

"மொசாம்பிக் தலைநகரான மபுட்டோ நோக்கிவந்த மஷேலின் விமானத்தை தென்னாபிரிக்காவின் மலைகள் அடர்ந்த பகுதிக்கு திசைமாற்றி அவ்விபத்தை தென்னாபிரிக்கா உண்டுபண்ணியுள்ளது என்று சோவியத் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மபுட்டோ விமான நிலைய கட்டுப்பாட்டுக் கோபுரத்தின் வானொலி சமிஞ்ஞைகளின் அலைவரிசையின் அத்திசை திருப்புவதற்கான அறிவிப்பை தென்னாபிரிக்கா வழங்கியிருந்ததாகவும் சோவியத் அறிவித்துள்ளது

தென்னாபிரிக்கா தெரிவித்திருப்பதுபோல சமோரா மஷேலின் சோவியத் தயாரிப்பு விமானத்தில் எதுவித கோளாறும் இருக்கவில்லை எனவும் மாஸ்கோ அறிவித்துள்ளது

### இந்தியாவில்———

## பெண்களை இழிவுபடுத்தும் விளம்பரங்களுக்குத் தடை!

புதுடில்லி, நவ 13

பெண்களை இழிவு செய்யும் விளம்பரங்கள், சுவரொட்டிகள், ஓவியங்களுக்கு இந்தியாவில் தடை கொண்டுவரப்பட்டுள்ளது. இத்தடையை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் விவகார, சிறுவர் நலன் பேணும் துறைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் திருமதி மார்கிரெட் ஆல்வா இத்தடை மீதான மசோதாவை ராஜ்ய சபையில் நேற்றுச் சமர்ப்பித்து நிறைவேற்றினர்.

மேற்படி சட்டத்தை மீறுவோருக்கு இரண்டு வருடச் சிறைத் தண்டனையுடன் இரண்டாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் சில விளம்பரதாரர்கள் சினிமா மற்றும் விற்பனைப் பொருள்களில் போடும் விளம்பரங்கள் பெண்களை இழிவு செய்வனவாக உள்ளன என்று இந்தியாவில் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஐரிஷ் பொப் பாடகருக்கு 3-ம் உலக விருது!

லண்டன், நவ 13

பிரபல ஐரிஷ் பொப்இசைப் பாடகரான பொப் கெல்டோவிற்கு மூன்றும் உலகவிருது வழங்கப்படுள்ளது இவ்விருது ஒரு லட்சம் அமெரிக்க டாலர்களைக் கொண்டதாகும்.

ஆபிரிக்க பட்டினி நிவாரணத்துக்கு நிதி சேகரிக்கும் வகையில் 'பாண்ட் எய்ட்' லைவ்எய்ட்''ஸ்போஸ்ட்எய்ட்' என்ற நிகழ்ச்சிகளை நடத்தியமைக்காகவே கெல்டோவ் 3ம் உலக ஸ்தாபனத்தினால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

130 மில்லியன் டாலர்களை மேற்குறிப்பிட்ட மூன்று நிகழ்ச்சிகள்மூலம் பொப்கெல்டோவ் சேகரித்திருந்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

அவருக்கு வழங்கப்பட்டுள்ள விருதுகுறித்த பாராட்டுப் பத்திரத்தில், உதவி தேவைப்படுபவர்களுக்கு அதிசயிக்கத்தக்க முறையில் நிதி சேகரித்திருந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'பாண்ட் எய்ட், 'லைவ் எய்ட் ஆகிய நிகழ்ச்சிகளில் சர்வதேச புகழ்மிக்க பொப் இசைக் கலைஞர்களை ஒன்றுதிரட்டி இசை நிகழ்ச்சிகளை நடத்தியும். ஸ்போட்ஸ் எய்ட்' நிகழ்ச்சியில் உலகின் அனைத்துப் பகுதிகளிலும் மரதன் ஓட்ட நிகழ்ச்சிகளை நடத்தியும். பொப் கெல்டோவ் ஆபிரிக்க பட்டினி நிவாரணத்துக்கு நிதி சேகரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது


## யாழ். வாழ் முஸ்லீம் மக்களுக்கோர் நற்செய்தி !

திரு. நளீம் ஹாஜியாரின் இலங்கையிலே மிகப்பெரிய கோழிப்பண்ணையான Bairaha Farmsஇல், விஞ்ஞான முறைப்படி, மிருக வைத்தியர்களின் ஆலோசனைக் கிணங்க வளர்க்கப்பட்டு, இஸ்லாமிய மதக்கோட்பாடுகளுக்கமைய [HALAL - ஹலால்], சுகாதார முறைப்படி தயார்படுத்தப்பட்ட சுவைமிக்க

## கோழி இறைச்சி!!

## "Bairaha Farm Broilers"

[(B)பைரா (Fபாம் புரொய்லர் கோழி இறைச்சி]

## 1 Kg - 62/50

குறிப்பு:

★ பொருட்கள் கொழும்பிலிருந்து குளிரூட்டப்பட்டவாகனத்தில்(Freezer Truck) இல் தருவிக்கப்பட்டு, இங்கு குளிரூட்டிய அறையில் (Cold Room)இல் சேமித்து வைக்கப்பட்டுள்ளது எம்மிடம் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கும் வியாபாரிகளுக்கும் பொருட்களின் தரம், சுவை என்பன உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

✳ மொத்தமாகவும் சில்லறையாகவும் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.

வடமாகாண ஏகவிநியோகஸ்தர் :-

The Medical Hall மெடிக்கல் ஹோல்

No 224, Hospital Road. Jaffna. Phone - 2 2 5 7 5

இல. 224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2 2 5 7 5

(A 2867)


## பணிவான வேண்டுகோள்

யாழ். பல்கலைக்கழக 3ம் வருட மாணவனான அருணகிருநாதன் விஜிதரன் கடந்த 4ந் தேதி அவர் தங்கியிருந்த இடத்திலிருந்து காணாமல் போய்விட்டதை எல்லோரும் அறிவீர்கள் இவர் சென்ற ஆண்டு மட்டக்களப்பில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அவரின் தந்தையின் நண்பர்களின் முயற்சியால் இராணுவ முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டார் இப்படியான பயங்கர அனுபவம் இவருக்கு இனியும் நிகழக்கூடாதென விரும்பி அவருக்கு பாதுகாப்பான இடமான யாழ்ப்பாணத்திலேயே இருந்து யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலுவதற்கு ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டது. இவரின் தகப்பனார் திரு. தளையசிங்கம் அருணகிரிநாதன், பின்தங்கிய மக்களின் வளர்ச்சிக்காக லயன்ஸ் கழகங்களினூடாக அரும்பாடுபட்டவர் இவர் மட்டக்களப்பு லயன்ஸ் முன்னாள் தலைவரும், பிரதிமாவட்ட ஆளுனராகவும் இருந்து பல சேவைகளை செய்து வருகின்றார் மட்டக்களப்பு லயன்ஸ் கழகத்தினூடாக, மட்டக்களப்பு வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவை ஆரம்பிப்பதற்கும், பின்தங்கிய மக்களுக்கு 400 வீடுகள் கட்டுவதற்கும் ஊன்றுகோலாய் இருந்தவர். இப்படி சேவைமனப்பான்மை உடையவரின் மகன் விஜிதரனும் அதேமனப்பான்மை கொண்டவர். ஆகவே இப்படிப்பட்ட ஒருவரை மனிதாபமான அடிப்படையில் கண்டுபிடித்து உதவுமாறு மக்களை வேண்டுகின்றோம்.

(A 3 03) யாழ். லயன்ஸ் அங்கத்தவர்கள்.

### மணிவாக்கு

பயம் கோழைத்தனமன்று. பயத்தை எதிர்த்துப் போராடாது விடுவதே கோழைத்தனம். பலவீனன் பயந்து ஒதுங்கி விடுவான். வீரமுள்ளவன் பயத்தின் மத்தியிலும் போரிடுவான்.

— ஆனேல்ட் எச் கிளசோவ்

# நமது நோக்கு

## பொதுமக்களை பாதிக்காதாம் இந்த "பட்ஜட்"

நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தாக்கல்செய்த வரவு செலவுத் திட்ட யோசனைகள் பொதுமக்களைப் பாதிக்காத விதத்தில் தயாரிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

யானையைக்கட்டி தீனி போடுகின்றவன் அந்த யானையால் எதவித பயனுமில்லை என்ற நிலையில் "வீட்டில் உள்ளவர்களுக்கு எதுவித பாதிப்பும் இல்லை. ஏதோ அன்றன்றைக்கு சாப்பிட வசதியிருக்கிறது" என்று கூறிக்கொள்வது போலிருக்கிறது இந்தக்கூற்று.

ஏனெனில் நாட்டின் அபிவிருத்திக்கும், வறுமையில் வாழும் மக்களின் மேம்பாட்டுக்கும் ஒதுக்கப்படவேண்டிய பணத்தில் பெருந்தொகையையும், ராணுவ நடவடிக்கைகளுக்கே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கில் அமைதியை நிலைநாட்டுவதற்கு இருந்த சூழ்நிலைகளையெல்லாம் பாழடித்து விட்டதின் காரணமாக நாடு முழுவதையுமே ராணுவத்தின் பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டிய நிலைமை அரசுக்கு எழுந்துள்ளது இதனால் நாட்டின் பாதுகாப்புவகையருக்களுக்கு முன்னெப்போதையும்விட பெருந்தொகைபடணம் ஒதுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது பத்திரிகைகளில் வந்த விபரங்களின் படி அது பின்வருமாறு:

இராணுவம் 3.9 கோடியே 19 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய், பொலிஸ்; 164 கோடியே 11 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய், விமானப்படை: 107 கோடியே 81 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய், கடற்படை: 91 கோடியே 80 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய், ஆயுதத்தொண்டர் படை, பொலிஸ் ரிசேர்வ் படை:70 கோடியே 79 லட்சத்து 95 ஆயிரம் ரூபா. இவைதவிர விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள், ஊர்காவற்படை, தேசிய உளவுப்பணியகம், விசேஷ அதிரடிப்படை, தேசிய துணைப்படை, மற்றும் வர்த்தக, கைத்தொழில் நிறுவனங்களின் பாதுகாப்புச் செலவுகள் எனப் பலவேறு வகைகளிலும் பாதுகாப்பு அமைச்சுக்கும் தேசிய பாதுகாப்பு அமைச்சுக்கும் மாத்திரம் ஓராயிரத்து 103 கோடியே 18 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆக, ஏனைய அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளையும் சேர்த்து ஏற்படக்கூடிய7200 கோடி ரூபாய் செலவினத்தைசிகரட், பீடி, சாராயம்முதலியவற்றின் விலைகளைக் கூட்டுவதன்மூலம் மட்டும் சாதாரண பொதுமக்களுக்குப் பாதிப்பு இல்லாமல் சரிக்கட்டிவிடலாம் என்பதில்லை. அமைச்சர் வெளிநாட்டு உதவிகளையே பெரிதும் நம்பியிருக்கிறார்.

அதுமட்டும் தாராளமாகக் கிடைத்துவிடுமானால் இந்த நாட்டில் தேனும், பாலும் ஆறுகப்பெருக்கெடுத்து ஓடுமாம். பாழாய்போன இனப்பிரச்னை இடையில் வந்து தடுத்துவிட்டதாம்.

முப்பத்தைந்து ஆண்டு காலம் இந்த நாட்டில் நடைபெற்று வந்துள்ள பேரினவாத ஜனநாயக ஆட்சியின் பெறுபேறே இந்த நிலைமை என்பது இன்னமும் புரிந்துகொள்ளப்படவில்லை.

அதன் அதிஉன்னத உச்சத்தை 1983ம் ஆண்டு தென்னிலங்கையில் ஏற்பட்ட வெறியாட்டம் உலகுக்கு எடுத்துக்காட்டியது.

நிதியமைச்சரின் புதிய யோசனைகளில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் எதுவும் அதிகரிக்கப்படவில்லையென்பது ஆறுதல் அளிக்கும் விடயந்தான், என்றாலும் கோதுமையின் இறக்குமதித்தீர்வை 10 சதவீதமாக அதிகரித்திருக்கிறார் இதனால் ஏற்படும்தாக்கத்தை உணவுத் திணைக்களம் பொறுத்துக் கொள்ளும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது?

உணவுத்திணைக்களம் தனக்கு ஏற்பட்டுள்ளபாதிப்பை வேறுவிதமாகபொதுமக்கள் தலையில் சுமத்தமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?.

உணவு விலைகள் கஸட் அறிவித்தல்கள் மூலம் திடீர் திடீரென அதிகரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளை எவரும் மறந்திருக்கமுடியாது.

இனப்பிரச்சனை தீர்வுக்கு அரசு எடுக்கும் முயற்சிகள் பலனளிக்கும் பட்சத்தில் நிதியமைச்சர் எதிர்பார்க்கும் விதத்தில் வெளிநாட்டு உதவிகள் தாராளமாகக் கிடைக்கலாம். ஆனால் இப்போதைய அரசின் நடவடிக்கைகள் தமிழரையும், ஏனையோரையும் ஏமாற்றும் முயற்சிகளாய் இருக்குமானால் மேற்கு நாடுகளில் அதன் உண்மை நிலை வெளிப்படுமானால் நிச்சயமாக எதிர்பார்க்கப்படும் தாராள உதவிகள் தடைப்பட்டுவிடும்.

அந்நிலையில் இந்நாட்டு ஏழைமக்களே வரவு செலவுத் திட்டத்தின் துண்டு விழும்தொகையைச் சுமக்க வேண்டிய நிலைக்குத்தள்ளப்படுவார்கள்.

## இளைஞர் கழகம் நன்கொடை

மன்னார், வியாழன்

தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தின் மன்னார் மாவட்டக்காரியாலயம் இளைஞர் கழகங்களுக்கான நன்கொடை திட்டத்தின்கீழ்இளைஞர்கழகத்துக்கென ரபாமுத்தரைஎழுத்துஉபகரணம் என்பவற்றை வழங்கிவருகிறது.

இதற்கென 8300 ரூபா செலவில் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன இவற்றைவிட 1985ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள கழகங்களுக்கென 4500 ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. [சி]

### வெள்ளிச்சிந்தனை

## திருமூலர் நாள்

நன்றி என்பது மிகஎளிமையானதும் அருமையானதுமாகும் நன்றியின் இனிமை அவசியம் என்பன அனைவருக்கும் சுலபமாகப் புரிவதால் எளிமையானதாக உள்ளது. இது மட்டுமன்றித் துரும்பும் பல்லுக்குத்த உதவும் என்றபடி சாதாரணமானவர்களாலும் பிறருக்கு நன்மை செய்யக் கூடியதாயிருப்பதனாலும் நன்றி எளிதாகின்றது ஆனால் ஒருவன் செய்த நன்றியை மறக்காமலிருப்பதும் பிறருக்குத் தேவைப்படும் போது நன்றி செய்யத்தான் வேண்டும். என்ற நிலையிலும் நன்றியைப் பேணும் நிலையிலும் நன்றி அருமையானதாக உள்ளது இவ்வாறான அருமைபற்றி அஞ்சாது நன்றியைக் கைக்கொள்ளும் வேளையில் ஒருவனோ ஒருசமூகமோ அடையும் பெருமையும் நன்மையும் பெறுமதிமிக்கதாயுள்ளது. இதுமட்டுமன்றி இவ்வாறு நன்றியைமறவாது கொள்ளாத போது அம்மனிதனும் சமூகம் அருவருக்கத்தக்க மன்னிக்கமுடியாத சிறுமைக்குள்ளாகி விடுகின்றனர். இப்படியான உண்மைகளை உணர்த்தும் வகையில் திருமூலரின் வாழ்வில் ஓர்நிகழ்சியுள்ளது திருமூலரின் திருமந்திரத்தைப் படித்து சிந்தித்து மேற்கொண்டு வாழ வழியற்ற நிலையில் அவரின் வாழ்வு உணர்த்தும் நன்றியைப் பேணும் ஒன்றே நமக்கும் நம் சமூகத்துக்கும் உய்வினை உண்டுபண்ணும் எனலாம்.

நமக்கு நேரடியாக இல்லாத போதிலும் நம் மனித சமூகத்தின் இனிய சிறந்த தாய்க்குலம் என்ற அடிப்படையில் போற்றவேண்டியது பசுக்கூட்டமாகும் இத்தகைய பசுக்கூட்டத்தின் துன்பம் நீங்க எண்ணி முயன்றதே. திருமூலர் வாழ்வில் குறிப்பிடத்தக்கதான நிகழ்ச்சியாகும்.

பசுக்களின் துன்பம் துடைக்கும் நிலையில் வேண்டிய பொறுப்பை விட்டு, பயனில்லை என்றோ போஷிக்க முடியாது என்றோ நினைக்கும் வேளையில் பசுவை அடிமாடாக இறைச்சிக்கு அனுப்ப உடைந்தையாக உள்ளநிலையின் அற்பத்தனத்தையும் நன்றிகெட்ட தன்மையையும் நீக்கும்போதே நன்றிமறவாப் பெருநிலையை எமக்குவரும். அதன் அடிப்படையில் பெற்றோர்- சமூகத் தொண்டர் என்னும் வரிசையில் உள்ள அனைவரிடத்தும் நன்றி மறவா நிலை ஏற்படும்.

செந்தமிழ்ச் சைவசித்தாந்த சித்தாமரபுக் கலங்கரை விளக்கமான திருமந்திரத்தை உலகுக்கு உதவும் பெருமையைத் திருமூலருக்கு ஏற்படுத்திய பசுக்காத்தல்- பசுக்களின் துயர்நீக்கல் எனும் பண்பை நினைவு கூர்ந்து பின்பற்றத் திருமூலர் குருபூசை நன்னாளாகிய இத்தினத்தில் உறுதி கொள்வது நன்று.

நன்றி மறப்பது நன்றன்று-
நன்றல்லது (தீயதை)
அன்றே
மறப்பது நன்று.
—வள்ளுவர்

- அருளாளன்

### இன்று 97-வது பிறந்ததினம்

# நேருவின் தொலைநோக்கில் இந்தியாவின் நிலைப்பாடு

1956-ல் நேருஜி, "மார்க்ஸ் மிகப் பெரிய மனிதர் அவரிடமிருந்து நாமனைவருமே நிறைய விஷயங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறோம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்த மார்க்ஸ் இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களின் பிரச்னைகளுக்கு பரிகாரம் சொல்லியிருக்கவேண்டுமென எதிர்பார்ப்பது மார்க்ஸுக்கு எந்தவகையிலும் நியாயம் வழங்கியது ஆகாது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சர்வதேசியத் தேவைகளுக்கும் இருபதாம் நூற்றாண்டின சர்வதேசியத் தேவைகளுக்குமிடையே பெரிய மாற்றங்களும் வேறுபாடுகளும் இருந்ததை வரலாற்று ஆசிரியரான நேருஜி நன்கு அறிந்து வைத்திருந்தார். அவருடைய பார்வை தேசிய எல்லைகளை எல்லாம் தாண்டி விரிந்து பரந்து இருந்ததால், சுரண்டலற்ற சோஷலிச சமுதாயம் இந்திய மண்ணில் அமைவது உலக அரங்கில் சுரண்டப்படுவோரின் போராட்டத்தைப் பலப்படுத்தும் மிகப் பெரிய சக்தியாக அமையுமென நம்பினார். ஆனால் அவர் கனவிரும்பிய சமுதாயத்தைச் சமைக்க உள்நாட்டிலேயே மாபெரும் எதிர்ப்புக்களை சமாளிக்க வேண்டியிருந்தது.

—பி. சி. கணேசன்—

### இந்திய முதலாளிகள்

காங்கிரஸ்போராட்ட இயக்கமாக இருந்த காலத்திலேயே முதலாளித்துவத்தின் பிடி அதன்மீது பலமாகத்தான் இருந்தது. என்றோ ஒருநாள் காங்கிரஸ் தனது இலட்சியத்தில்- இந்தியாவுக்கு பரிபூரண சுதந்திரம் பெற்றுத்தரும் லட்சியத்தில்- வெற்றியடைந்தே தீருமென இந்திய முதலாளிகள் அறிந்துவைத்திருந்தனர். ஆகவே வெகுஜன அனுதாபத்தைப் பெறவும். அதிகார மாற்றம் நிகழும்போது அதன் பலனை அனுபவிக்கவும் இந்திய முதலாளித்துவம் தன்னையும் சுதந்திரப் போராட்டத்தில் காங்கிரசோடு இணைத்துக்கொண்டது. சொல்லப்போனால் காங்கிரஸ் மேலிடத்தில் என்றுமே இந்திய முதலாளிகள் கணிசமான செல்வாக்குப் பெற்றிருந்திருக்கின்றனர். இவர்களுடைய செல்வாக்கு காங்கிரஸை பாமர மக்களிடமிருந்து தனிமைப்படுத்த முடியாமற் போனதற்கு காரணமாயிருந்தவர்கள் காந்திஜியும் நேருஜியும் ஆவார்கள். இந்த இருவரும் தங்களுடைய தலைமை பலத்தை ஸ்தாபனத்திடமிருந்து மட்டும் பெற்றவர்களல்ல. மகத்தான மக்கள் சக்தியால் தலைமைப் பதவிக்கு உயர்ந்து அதை மக்களின் ஏகோபித்த ஆதரவாலேயே நிலைப்படுத்திக் கொண்டவர்கள். ஆனால் காந்திஜி இந்திய முதலாளிகள் ஏழைகளின் தர்மகர்த்தாக்களாக விளங்கவேண்டுமென ஆசைப்பட்டார். காந்திஜியின் இந்த ஆசையினை நேருஜி என்றைக்குமே பகிர்ந்துகொண்டதில்லை. மாறாக அது விஞ்ஞான ரீதியான கண்ணோட்டமல்ல எனவும் நேருஜி நம்பினார்.

### இருவித கண்ணோட்டம்

காந்திஜியும் நேருஜியும் அடிப்படைகளில் ஒன்றாகவே இருந்தார்கள். குறிக்கோள்களில் ஒன்றாகவே இருந்தார்கள். மனோபாவநிலைகளில் கூட ஏறத்தாள ஒன்றாகவே இருந்தார்கள். ஆனால் குறிக்கோள்களையடையக் கையாளவேண்டிய உத்திகள் விஷயத்தில் மிகவும் முரண்பட்டு விளங்கினார்கள். காந்திஜியின் கண்ணோட்டம் மத ஆத்மீக அடிப்படையில் அமைந்திருந்தது. நேருஜியின் கண்ணோட்டம் விஞ்ஞான லோகாதய அடிப்படையில் அமைந்திருந்தது. ஆனால் இவருடைய எண்ணங்களும், லட்சியமும் தூய்மையானதாக இருக்குமானால் அதை அடையும் மார்க்கமும் தூய்மையானதாக இருக்கவேண்டும் என்ற நிலையில் ஒருமித்து ஐக்கியப்பட்டிருந்தன. அவர்களுடைய வேறுபாடுகளெல்லாம் இந்தியப்பண்பாட்டின் அந்த மகோன்னத நிலையில் சங்கமமாகிக் கரைந்து ஒருவர்பால் மற்றொருவரை நம்பிக்கை கொள்ளவைத்தது. ஜனநாயக மனோபாவத்தின் சாரமாக காந்திஜி விளங்கினார். சோஷலிச மனோபாவத்தின் சாரமாக நேருஜி விளங்கினார். காந்திஜி சோஷலிசத்தை நேசித்தார். அது அவர் வழியில் அமையவேண்டுமெனவும் ஆசைப்பட்டார். நேருஜி ஜனநாயகத்தை நேசித்தார். அது சோஷலிச லட்சியத்துக்கு முரண்படக்கூடாதென ஆசைப்பட்டார். எடுத்துக்கொண்ட நிலைகளால் வேறுவேறுபட்டிருந்த இருவரும் கருத்தால் ஒன்றுபட்டவர்களாகவே காட்சி தந்தார்கள். மேற்கின் உயர்ந்த தன்மையினைக் காந்திஜி நேருவிடத்தில் கண்டார். கிழக்கின் மகத்தான பெருமைகளை நேருஜி காந்திஜியிடத்தில் கண்டார். கிழக்கும மேற்கும் இவருடைய உறவாலும் ஒருமைப்பட்ட ஒரு பெரும் நாகரிகமாக உருபெற்றது பொருளாதார முன்னேற்றத்தில பின்தங்கிய கிழக்கு மேற்கிலிருந்து ஏற்றம பெறவும், ஆன்மீக வாழ்வின் அவல நிலைக்கு இரண்டாவது உலகப் போரால் தள்ளப்பட்ட மேற்கு கிழக்கிலிருந்து வாழ்க்கை மதிப்பீடுகளைப் பெறவும் இருவர் கூட்டுறவும் பயன்பட்டது. அதன் விளைவாக ஜனநாயகத்தின் சிறந்த அம்சங்களும் சோஷலிசத்தின் சிறந்த அம்சங்களும இணைந்த ஜனநாயக சோஷலிசம், வெறும் சித்தாந்தமாக அல்ல. நடைமுறைசெயல்திட்டமாக உருப்பெற்றது.

பலாத்காரப் புரட்சியின்றி, முதலாளித்துவம் தனது கையறு நிலையை எண்ணி கரைந்துருக சோஷலிச சகாப்தத்தை நேருஜி இந்திய மண்ணில் அங்குரார்ப்பணம் செய்து, உறுதியான அந்த அடித்தளத்தின் மீதுநின்று கொண்டு உலகப் பிரச்னைகளுக்கும் தான் கண்ட புதிய மதிப்பீடுகளைப் பயன்படுத்தத் தலைப்பட்டார். இரண்டாவது உலகப் போருக்குப் பின் உருவான சர்வதேசிய சூழ்நிலையில் நேருஜின் நிலையும் கண்ணோட்டமும் இன்றியமையாத் தேவைகளாயிரு[ந்தன]... பின்தங்கிய பொருளா[தார நிலை]யைக் கொண்ட பாரதம் ... அணியாகப் பிரிந்து ... உலகப் பெரும் வல்லரசு[கள்] எந்த அணியிலும் சே[ராது] தனித்து நின்றதைப்பல தந்திரிகள் வியப்போடு ... னித்தனர். சில ராஜ[தந்திரி]கள் அது பாரதத்தைத் [தனி]மைப்படுத்தி பல[வீன] நாடாக்கி விடுமென ஆ[ருடம்] சொல்லினர். உள்நாட்[டிலும்] சில அரசியல் தலைவ[ர்கள்] அந்த கணிப்பினை ஆமோ[தித்த]னர். ஆனால் நேரு[ஜியின்] தொலைநோக்கே மு...

## சிருப்பர் மட[ம்]

சைவ மக்கள் தெய்வ... பாட்டிற்கு நான்கு ... பெற்ற சிவஸ்தலங்கள் உ... திருக்கேதீஸ்வரம், முனீஸ்[வரம்] கோணேஸ்வரம் நகு[லேஸ்]வரம் என்பனவே அ... கும், இவற்றுள் கீரிமலை நகுலேஸ்வரம் என்னும் ... துடன் எம் மக்கள் வழ... இயற்றும் தலமாக விள... தாகும். இவ்விடத்திற் ... 1891ம் ஆண்டு திரு ... மணியம் கதிரவேலுப்ப... (சிருப்பர்) எனும் பெ... இம் மடத்தைக் கட்டி ... சேவைக்கென அர்ப்ப... தார். அவர்கள் மடத்தி... தன் பெயரையிடாமல் ... லேஸ்வர தண்ணீர்ப்பந்... என்றபெயரை இட்டார் ... கீரிமலை நகுலேஸ்வர ... ணீர்ப் பந்தல் ரறஸ்ற்( ... க்குச் சொந்தமானது. ... டன் கிருப்பர் தன் தம்... ஒருவரின் மகளின் ... ஆண்டு பிறந்த மகனு... நகுலேஸ் என்ற நாம... இட்டார். இவர் இப்... வயது முதிர்ந்தவராக ... குடும்பத்தினருடன் ... வில் யாழ்ப்பாணத்தில் ... கின்றார். இவரை விடச் ...

## ...னம்
## ...ாக்கில்
## ...பாடு

...ருஜின் நிலையும் கண் ...டமும் இன்றியமை ...தேவைகளாயிருந்தன. ...கிய பொருளாதாரத் ...கொண்ட பாரதம் இரு ...ாகப் பிரிந்து கிடந்த ...பெரும் வல்லரசுகளின் ...அணியிலும் சேராமல் ... நின்றதைப்பல ராஜ ...ன் வியப்போடு கவ ...ார். சில ராஜதந்திரி ...து பாரதத்தைத் தனி ...டுத்தி பலமிழந்த ...கி விடுமென ஆருடம் ...ினர். உள்நாட்டிலும் ...சியல் தலைவர்கள், ...ணிப்பினை ஆமோதித்த ... ஆனால் நேருஜியின் ...நோக்கே முடிவில்

## ...றப்பர் மடம்

... மக்கள் தெய்வ வழி ...ற்கு நான்கு பெயரி ...சிவஸ்தலங்கள் உண்டு. ...தீஸ்வரம், முனீஸ்வரம் ...ஸ்வரம்" நகுலேஸ் ...என்டனவே அவையா ...வற்றுள் கீரிமலைதான் ...ஸ்வரம் என்னும் நாமதி ... எம் மக்கள் வழிபாடு ...ம் தலமாக விளங்குவ ... இவ்விடத்திற்தான ... ஆண்டு திரு: சுப்பிர ... கதிரவேலுப்பிள்ளை ...ர்) எனும் பெரியார் ...த்தைக் கட்டி மக்கள் ...ென அர்ப்பணித் ...அவர்கள் மடத்திற்குத் ...பெயரையிடாமல் "நகு ... தண்ணீர்ப்பந்தல்" ...பெயரை இட்டார். இது ... நகுலேஸ்வர தண் ...ந்தல் ரறஸ்ற் (Trust) ...சாந்தமானது. இத்து ...றுப்பர் தன் தம்பியார் ... மகளின் அதே ... பிறந்த மகனுக்கும் ... என்ற நாமத்தை ...ர். இவர் இப்போது ... முதிர்ந்தவராக தன் ...தினருடன் கொச்சு ...ாழ்ப்பாணத்தில் இருக் ... இவரை விடச் சிறுப்பர் ஐயா அவர்களின் மகளின் மகன் (பேரன்) திரு. அ. சம்பந்தன் அட்வகேற் நாவலர் றோட் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றார். மற்றையவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வெளியே இருக்கிறார்கள்,

குறித்த சிறுப்பர் மடம் மக்களுக்கு அளப்பரிய சேவை புரிந்து வந்தது யாவரும் அறிந்ததே. ஆனால் தற்போது

## மக்கள் கருத்து

நிலை முற்றாக மாறியுள்ளது எந்த நோக்கத்திற்காக இம் மடம் ஸ்தாபிக்கப்பட்டதோ அந்த நோக்கங்களுக்கு மாறாக ஒரு சில தீய சக்திகளால் நிராகரிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக வழமையாக கந்தபுராணம் சிவபுராணம் போன்ற அரிய சமய நூல்கள் ஓதுவதையும் கைவட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். உண்மையில் படத்துக்குக் கிட்ட இருக்கும் சில குடும்பத்தினர் தங்கள் கண்போன்று இம் மடத்தைக் காத்து வந்துள்ளனர். ஆனால் தற்போது தமிழ் மக்களுக்கு ஏற்பட்டு வரும் கஷ்டங்களும் இடையூறுகளும் அவர்களை ஓரளவுக்குச் சோர்வடையச் செய்தாலும் தொடர்ந்தும் இந்த ஸ்தாபனத்தைக் காத்து வர வேண்டிய ஓர் கடமை உண்டு எனவே இப்படியான ஓர் நிலைமை ஏற்படாத வண்ணம் இந்து மக்கள் தகுந்த நடவடிக்கையெடுப்பது மிகவும் அத்தியாவசியம் ஆகும்.

இந் நிலையில் புனித சமய சார்பான சங்கங்களும், நன்னெறிக் கழகங்களும் எங்களுடைய விடுதலைக்காக முற்பட்டிருக்கும் புனித இயக்கங்களும் முன்வரவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அ. சம்பந்தன்
(சட்டத்தரணி)

ஏ. நகுலேஸ்
(ஓய்வுபெற்ற ரயில்வே சிறுப்பர்)

# உடல், உளநலக் கல்வி சேவைக்காலப் பயிற்சி

யாழ்ப்பாணம் வெள்ளி

பாடசாலை மாணவர்களின் உடல் உள சமூக நலன்களை கருத்திற்கொண்டும் யாழ். குடாநாட்டின் விளையாட்டுத் தரத்தினை மேம்படுத்தும் முகமாகவும் கல்விப்பணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில் உயர்கல்வி வட்டாரக்கல்வியதிகாரி திரு வ. கணேசலிங்கத்தினால் சிறப்பான முறையில் ஒழுங்கமைப்பட்ட உடல் உள நலக்கல்விக்கான சேவைக் காலப்பயிற்சி இந்த மாதம் 10ந்திகதி முதல் 14ந்திகதிவரை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்று வருகிறது

யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலிருந்தும் 70 ஆசிரிய ஆசிரியைகள் பங்கு பற்றும் இச்சேவைக்காலப் பயிற்சி நெறியின் விரிவுரையாளர்களாகவும் போதனாசிரியர்களாகவும் திரு.வி. ரி கணேசலிங்கம், திரு.ரி. சிவகுமாரன், திரு. ரி. முத்துசாமி, திரு. வி. முருகேசு, செல்வி ச. தர்மலிங்கம், திருமதி எஸ். திருநாவுக்கரசு திரு வி. வாமதேவன், திரு கே குமாரசுவாமி, திரு. ஏ தம்பித்துரை, திரு. வி கே. கணபதிப்பிள்ளை ஆகியோர் கடமையாற்றி வருகிறார்கள்.

பங்குபற்றிய ஆசிரியர்களுக்கான சான்றிதழ்கள் நிறைவு நாளின்போது கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கத்தினால் வழங்கப்படும். (சி)

...சரியென வரலாறு நிரூபித்தது.

## ராஜகோபுரம்

பண்டத்தரிப்பு, வியா.

சுழிபுரம் - பறாளை அருள்மிகு ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு பல லட்ச ரூபா செலவில் புதிய ராஜகோபுரம் ஒன்று நிறுவப்படவுள்ளது

இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் ஆலய தர்மகர்த்தாசபையினரால் அண்மையில் நடாத்தப்பட்டது சுழிபுரத்தைச் சேர்ந்த மலேசியா நாட்டு அன்பர்கள் இந்த இராஜகோபுரம் அமைக்கும் திருப்பணிக்கு நிதி உதவி வழங்க முன்வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இராணுவம் தேடுதலில் ஈடுபடுவதில்லை

ஒட்டுசுட்டான், புதன்

ஒட்டுசுட்டான் இராணுவ முகாம்மீது அண்மையில் விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலையடுத்து, தற்பொழுது இராணுவத்தினர் முகாம் சுற்றாடலில் தேடுதலில் ஈடுபடுவதில்லை.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற தாவடி ஆறுமுகம் நடராஜா என்பவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்து விடயத்தில்.

மரணமெய்தியவர்:

மரணசாதன நியாயாதிக்கம் } இல: T/83

1. செல்லையா சிவசுப்பிரமணியமும்
2. பெண் பாக்கிய லட்சுமியும், தாவடி தெற்கு, கொக்குவில்.

மனுதார்:

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ம் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்

வரைவு:
நடராசாவும்,
சபாநாதனும்.
மனுதாரின் சட்டத்தரணி:
[C 5756]

## ஞாயிறு சாம்பியன் மோதல்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்றுவரும் 9 வீரர் பங்குபற்றும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் சாம்பியன் மோதல்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இச் சாம்பியன் மோதலில் 'பி' பிரிவில் வைக்கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் விளையாட்டுக் கழகம் மோதும்.

ஏ பிரிவு ஆட்டத்தில் கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதும்,

மேற்படி போட்டிக்கு பிரதம அதிதியாக வண. ஜி எம். ஆர் நேசநாயகமும் சிறப்பு விருந்தினராக ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் ஜனப் ஏ. எச், ஹமீமும் கலந்து கொள்வார்கள். இப் போட்டிகள் அனைத்தும் ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். [வி]

## போராளிகளுக்கு அஞ்சலி


வவுனியா, வியா

பூவரசங்குளத்துக்கு அருகாமையில் வைத்து இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி மரணமடைந்த ஈ பி ஆர். எல். எப் இயக்கத்தின் 6 போராளிகளின் சடலங்கள் மக்கள் அஞ்சலிக்காக பூவரசங்குளம் சந்தியில் இன்று வைக்கப்பட்டிருந்த போது பெருந்திரளான மக்கள் அங்கு கூடி தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

இப்போராளிகளின் மறைவினால் இப்பகுதி ஒரே சோகமய

(7-ம் பக்கம் பார்க்க)


உ



## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய வருடம் ஐப்பசித் திங்கள் 29-ம் நாள் 15-11-86) சனிக்கிழமை காலை 8-10—9-18 மணிவரையுள்ள சுப வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
றஞ்சனகுமார்
(ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ் மனேஜர், நவீனசந்தை. யாழ்.)
அவர்கட்கும்

எமது ஏக புத்திரி
திருநிறை செல்வி
ஜெயந்தினி
அவர்கட்கும்

திருமணம் செய்துவைக்க பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உறவினர்கள், நண்பர்கள் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் வல்வரவை நாடும்:

திருமதி
குமாரசாமி.
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

திரு. திருமதி
முருகேசு,
தீருவில்,
வல்வெட்டித்துறை.

(C5770)



## பிரயாண ஒழுங்குகள்

குவைத் } சுப்பர் மார்க்கட் ஒயில் கம்பெனி
சவூதி }

சிங்கப்பூர் } பணிப் பெண்கள்
குவைத் }

அவுஸ்திரேலியா, நோர்வே

ஆகிய நாடுகளுக்கு குறைந்த கட்டணத்துடன் பிரயாண ஒழுங்குகள்.
பாஸ்போட், விசா, பொண்ட், ரிக்கற் யாவும் துரிதகெதியில் செய்துகொடுக்கப்படும்.

## ரஜீவன் ட்ரவல்ஸ்,

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

[A-2862]


# இன்றைய பலன்

மாதம்- ஐப்பசி
திகதி- 28 (14-11-86)
கிழமை- வெள்ளி
திதி- திரயோதசி
பி ப. வரை
நட்சத்திரம்- ரேவதி காலை 8-20ன் மேல் அச்சுவினி

மேடம்- இன்பம் உங்களைத் தாலாட்டும் புதிய உறவு முறைகளால் மகிழ்ச்சியடைவீர்கள் முன்னேற்றமான சம்பவங்களும் இடம்பெறும்.

இடபம்- புதிய தலைபிடி தலை தூக்கும் மாணவர்கள் உணர்ச்சிவசப்படாதிருக்கவும். சிலருக்கு அவப்பெயரும் கேட்க நேர்டும்.

மிதுனம்- முதலீடு செய்வதற்கு உகந்ததினம். கைத்தொழில் விருத்திபெறும். இல்லத்திலும் சுபகருமம் இடம்பெறும்.

கடகம்- கொள்கையில் அதிக மாறுதல் ஏற்படும். இனசனக் கொண்டாட்டம் உண்டு. தொழில்லாபமுண்டு.

சிங்கம்- ஆயுத பீடைக்கு இடமுண்டு அவசரப் போக்கைத் தவிர்க்கவும். தவறுகளும் நடக்கலாம். எதையும் முன்னெச்சரிக்கையுடன் நடக்கலாம். எதையும் முன்னெச்சரிக்கையுடன் செயலாற்றவும்,

கன்னி- குடும்பம் குதூகலமடையும் பொன்னான வாழ்வும் பொன்னாலேயே கிட்டும். கண்ணியமும் கடைவிரிக்கும். கடமையும் பிறக்கும்.

துலாம்- உறவு முறைகளில் வெடிப்புத் தோன்றும். எதிரிகள் எக்காளமிடுவர். வீண் அலைச்சலும் ஏற்படும்.

விருச்சிகம்- வாழ்வில் வசந்தம் பிறக்கும். புதியதுறையில் ஈடுபடுவீர்கள். புதுமையான எண்ணங்களும் உருவாகலாம்.

தனுசு- போதுமென்ற மனதுடன் செயலாற்றுவீர்கள். இனசனக் கொண்டாட்டங்களும் இடம்பெறலாம். கடமையும் கண்ணியமும் கொடி கட்டிப் பறக்கும்.

மகரம்- வியாபாரத் துறையில் லாபமேற்படலாம் உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்த நாள். நீண்ட பிரயாணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம்.

கும்பம்- எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும். பணவிடயத்தில்மூலம் பகை தோன்றலாம். அதிகப் பேச்சைத் தவிர்க்கவும்.

மீனம்- பகைமூட்டம் வட்டமிடும். எதிலும் தயக்கநிலை தோன்றும். செலவு ஊக் கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## கலைநகர் விளையாட்டு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டுக்கோட்டை கலைநகர் இளைஞர் மன்றத்தின் சார்பில் அண்மையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்ச்சியும், மரதன் ஓட்டப் போட்டியில் செல்வன சூரியகுலசிங்கம் முதலாவது இடத்தைத் தட்டிக் கொண்டார்.

''7-வீரர்'' பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் சாம்பியன் மோதலில் யாழ் முஸ்லிம் விளையாட்டுக் கழகத்தை வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சாம்பியன் கேடயத்தை தட்டிக் கொண்டது.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு என். ராமநாதன் மத்தியஸ்தம் வகித்தார்: (வி)

## அகதிகளுக்கு இரண்டுவார உணவுப்பொருள்

புங்குடுதீவு, வியா

அண்மையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள அடம்பன் பகுதியில் ஏற்பட்ட வன்செயல்களை அடுத்து சின்னப் பண்டி விரிச்சான், பெரிய பண்டி விரிச்சான் ஆகிய பகுதிகளில் இருந்து அகதிகளாக இடம் பெயர்ந்து மடுத்திருப்பதியில் தஞ்சமடைந்துள்ளவர்களுக்கு இரண்டுவாரத்திற்கான உணவு வகைகளை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனப் எம். எம் மக்பூல், அடம்பன்பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் எம் குறூஸ் ஆகியோர் வழங்கியுள்ளார்கள்.

## 'லயன் மன்னார்'

மன்னார், வியா:

மன்னார்லயன்ஸ்கழகத்தினர் அண்மையில் 'லயன் மன்னார்' என்ற தலைப்பில் ஓர் பத்திரிகையை வெளியீடுசெய்துள்ளனர் இப்பத்திரிகை மாதம் ஒருதடவை ஆங்கிலத்தில் வெளிவரும்; இப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராக டிலாசால் சபையைச்சேர்ந்த சகோ. சகோதரர் இல்லறியோசப் பணிபுரிகிறார். இதில் கழகச்செய்திகள் திட்டங்கள், மாணவர் உலகு, தாய் நலம் போன்ற விடயங்கள் வெளிவருகின்றன.


## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம்மாதம் 15-ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்புகொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிடப்பகுதி Labourers ஆக செல்ல விரும்புவோர் 14-ம் திகதிக்கு முன்னதாக பாஸ்போட், 6 படங்கள் ஆகியவற்றுடன் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:

N. பாலா,
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

★ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் வங்களாவடிச் சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

★ எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் குப்பிளான் சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

[A-2845]



## ஈழ மண்ணில் புகைப்படக் கண்காட்சி

முற்போக்கு கலாமன்றத்தின் ஆதரவில்
தமயந்தியின்
புகைப்படக் கண்காட்சி

காலம்: 14-11-86
பி ப 3—7 மணி
15-11-86 காலை 10—
மாலை 4 மணி வரை
இடம்: சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
பாடசாலை மாணவர் 3 ரூபா
ஏனையோர் 5 ரூபா.

கலை மக்களுக்காகவே!

(C 5762)





# விவசாயிகளே!

உங்கள் வயல்களில் நெல்லுடன் போட்டியிட்டு வளரும்

கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரை வாற்புல், ஆடிப்புல், பன்கோரை வகைகளை

● சேர்கோப்பூர் 36% — 450 மி. லி. ரூ. 68/- ; 3. லி. ரூ. 410/-
(புரொபனில் — 3, 4 டீ. பி. ஏ.)

பாவித்து சிறப்பாக கட்டுப்படுத்தி கூடிய விளைச்சலை உறுதி செய்துகொள்ளுங்கள்.

பாயர் இரசாயனம் விவசாயிகளின் பெருவிளைச்சலின் உறுதுணை.

BAYER

## ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10.

இது ஒரு ஜேர்மன் மேற்கு தயாரிப்பு

[A 3023]



விக்னு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றேட் யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தக, வகுப்புக்களுக்கு தனித்துவம் [illegible]வாய்ந்த ஒரே நிறுவனம்.

A/L [illegible]

## 87 மீட்டல் வகுப்பு
## DAY CLASSES

8 மணி

Sat-Sun. வகுப்பு 12 மணி
ஆரம்பமாகியுள்ளன;

குறிப்பு:- கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம்வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.

A 2860



திறமையான லங்கா அசொக் லேலண்ட் உதிரிப்பாகங்கள் சாதாரண விலையில் எம்மிடம் கையிருப்பில் உள்ளது.

விலை ரூ. 25/- முதல்

லங்கா அசோக் லேலண்ட் சர்விசஸ் (பிரைவேட்) லிமிடட்
60, பார்க் வீதி, கொழும்பு 2. தொலைபேசி: 541003
தொழிற்சாலை: பனுகொடை, ஹோமாகம. தொலைபேசி: 550592

## போராளிகளுக்கு

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மாகக் காட்சியளித்ததுடன் தோரணங்களும், வாழை மரங்களும் பூவரசங்குளம் சந்தியில் கட்டப்பட்டுத் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. (ஒ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
மேரி மெற்றில்லா
வதனபாஸ்கரன்
(நேசு)
மலர்வு; 5-08-1962
மறைவு: 14-11-1985

இறைவன் திருவடியில் உன் ஆன்மா கலந்திட என்றும் வேண்டி நிற்கும் வதனபாஸ்கரன், நிஷாந்தன், தங்கப்பன், மேபின், ரமணி, வின்சன், யோன்சன், ரஞ்சன்.

7, டச்றேட்,
யாழ்ப்பாணம்.

(C 5773)

## கடைசி நேர வரி விளம்பரம்

### காணவில்லை

சிறிய, பொம்மனேரியன் சிகப்பு நிறமுடைய பெண் நாய் 13-11-86 பகல் 2 மணி தொடக்கம் காணவில்லை காண்போர், தயவுசெய்து, கீழ்க்காணும், விலாசத்துடன், தொடர்பு கொள்ளவும். ஜெகநாதன் மாஸ்ரர் திருவள்ளுவர்சாலை, கந்தர்மடம் யாழபபாணம்.

(C 5786)

### சேவை

கைரேகை, கிரகநிலை, எண் சோதிடம் என்பனவைக் கொண்டு தங்கள் வாழ்வின் உண்மை நிலை கூறப்படும். மணமகன் மணமகள் தேவையானவர்கள் செவ்வாய்க் குற்றமுள்ள சாதகர்களும்) சகல மதத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். பிரபல கைரேகை எண்சோதிட நிபுணர், செ. நாகேந்திரராசா 174/16 கோவில் வீதி, நல்லூர், கைலாசபிள்ளையார் கோவிலடி.

C 5772

வெலிங்டன் திரையில்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கல்லாப்பெட்டி சிங்காரம்
நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)

இன்று முதல்
ரீகோ
10-30, 2-30, 4-30, 6-30
ROMANCING THE STONE
(Action and Thrills)
[Coluor]


## வன்னி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆகியவற்றுக்குப் பகுதியில் பல ஆயிரக்கான மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

100க்கு மேற்பட்ட உழவு யந்திரங்களும் ஆயிரத்துக்கு மேற்பட்ட சைக்கிள்களும் இந்த ஊர்வலத்தில் அணிவகுத்துச்சென்றன.

தண்டுவானில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் மும்பாசி, பட்டிக்குடியிருப்பு, ஒதியமலை ஊடாகச் சென்று நெடுங்கேணியில் முடிவுற்றது.

பாடசாலை மாணவ மாணவிகள், சிறுவர்கள், மாதர் அமைப்பு, தொழிற்சங்கங்கள் வயோதிபர்கள் இச்சு ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு, தண்ணீருற்று, முள்ளியவளை ஆகிய பகுதியல் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்திலிருந்து தண்ணீரூற்று பகுதி எங்கும் பிரமாண்டமான ஊர்வலம் நடைபெற்றது.

கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டு வாகனப்போக்குவரத்தின்றி நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது.

ஊர்வலங்களில் சென்றவர்கள் இந்திய அரசே தமிழீழத்தின் ஒப்பற்ற தலைவன் பிரபாகரனை விடுதலை செய்! ' விடுதலைக்காக சென்ற வீரர்களை விடுதலை செய்! "இந்திய-இலங்கை கூட்டு சதி முயற்சிக்கு விடுதலைப் புலிகள் பலியா?" "கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை மீண்டும் போராளிகளிடம் ஒப்படையுங்கள்" போன்ற சுலோகங்கள் கோஷிக்கப்பட்டன.

(ஒட்டு. நி: மா)

### வேலணையில்உண்ணாவிரதம்

இதேவேளை விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை உடன் விடுதலை செய்யுமாறு இந்திய அரசைக்கோரி வேலணைகிழக்கு தேவி கோட்டம் சனசமூகநிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது. (ஒ)

## பிரதமர்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

சாலைக்கு அவசரமாகவும், அத்தியாவசியமாகவும், தேவைப்படும் மருந்துகள் அடங்கிய பட்டியல் மூலம் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் கடமை புரியும் டாக்டர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்றே பிரதமர் ராஜீவ்காந்தி இந்த அன்பளிப்பைச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வா)

## எதிர்ப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நாளை 15-ம் திகதியை தமிழ்பேசும் மக்கள் அனைவரும் எதிர்ப்பு நாளாக கடைப்பிடிக்குமாறு ஈரோஸ் கேட்டுள்ளது.

இந்த எதிர்ப்புநாளையொட்டி "தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழு" அன்று மாலை பின்வரும் இடங்களில் பொதுக்கூட்டங்களை நடத்தவுள்ளது. நல்லூர் முத்திரைச் சந்தை, கோப்பாய்ச் சந்தி சாவகச்சேரி மட்டுவில், பருத்தித்துறை மண்டான்.

இந்த எதிர்புநாள் தொடர்பாக இணைப்புக்குழு துண்டுப் பிரசுரமொன்றையும் வெளியிட்டுள்ளது. (ஒ - சி)

## அரச பயங்கர

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உடனடியாக விடுதலை செய்யும்படி நாம்கோருகின்றோம்" என தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழு நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

போராளிகள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதைக் கண்டித்து யாழ். வர்த்தகர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழ் போராளிகளை நிபந்தனையற்ற முறையில் விடுதலை செய்து அவர்களது ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் எனவும் ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து ஓர் சுமுகமான முடிவைக் காணுமாறு இந்திய மத்திய அரசை யாழ். வர்த்தகர் சங்கம் கேட்டுக் கொள்கிறது, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## விடுதலைப்போராட்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தான தீர்வுக்காக இந்தியஅரசு பேச்சுவார்த்தை நடத்திவரும் விடுதலை இயக்கங்களின் தலைவர்களையும் போராளிகளையும் கைது செய்ததானது ஏற்றுக் கொள்ளமுடியாததாகும் இச்செயல் முழுக்கமுழுக்க ஈழமக்களை ஒடுக்கிவரும் இலங்கை அரசுக்கு உடந்தையானதாகவே அமைந்துள்ளது.

எக்காரணத்தைக் கொண்டும் ஈழவிடுதலை இயக்கங்களின் தலைவர்களை கைதுசெய்திருக்க வேண்டிய அவசியமில்லை ஏனெனில் இவர்கள் இந்திய அரசுடன் தொடர்பாகவே இருக்கின்றார்கள் என்பதுடன் என்ன விடயங்களையும் நேரடியாகவே தெரிவித்திருக்கக் கூடிய நிலைமைகள் உண்டு.

கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்ட பின்னரும் வீட்டுக்காவலில் வைத்திருக்க வேண்டிய நியாயமேதுமில்லை. இதைவிட ஆயுதங்களும் ஏனைய பொருட்களும் கைப்பற்றப்படவும் எத்தேவையுமில்லை.

இந்நடவடிக்கையானது மத்திய அரசினாலோ அல்லது மாநில அரசினாலோ எதனைமேற்கொள்ளப்பட்டதாக இருந்தாலும்கூட உடனடியாக இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு சுதந்திரமாக இயங்க அனுமதிக்கவேண்டும் ஆயுதங்களும் பொருட்களும் மீள ஒப்படைக்கப்படவேண்டும். (ஒ)

## உதைபந்தாட்டம்—வலைப்பந்தாட்டம்

# சென்ஜோன்ஸ்- சுண்டிக்குளி சாம்பியன்களாகத் தெரிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

மாணவர் முன்னணியின் சார்பில், பாடசாலைகளிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில், உதைபந்தாட்டப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரியும், வலைப்பந்தாட்டப் போட்டியில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும் சாம்பியன் கிண்ணத்தை தட்டிக் கொண்டன.

### உதைபந்தாட்டம்

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் - சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சாம்பியன் மோதலில், இருகோஷ்டிகளின் ஆட்டமும் ரசிக்கக் கூடியதாக இல்லாவிட்டாலும், ரசிகர்களின் ஆர்ப்பரிபபால் ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது. இவ் ஆட்டம் முடிவடைவதற்கு ஐந்து நிமிடங்கள் இருக்கும்போது, சென். ஜோன்ஸ் கல்லூரி ஒரு கோலைப்போட்டு வெற்றி பெற்றது. இப்போட்டியில், இருகோஷ்டிகளின் கோல்காப்பு வீரர்களும் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிக்கு திரு. ஏ. எஸ். குணரட்ணம் மத்தியஸ்தம் வகித்தார்.

3-வது இடத்துக்காக நடைபெற்ற போட்டியில், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிறப்பாக விளையாடி, இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரியை 2—1 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. ஏ. அஸ்ரீன் மத்தியஸ்தம் வகித்தார்

### வலைப்பந்தாட்டம்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கும், உடுவில் மகளிர் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சாம்பியன் மோதலில் இரு கோஷ்டிகளும் சிறப்பாகவும், விறுவிறுப்பாகவும் விளையாடியபோதிலும், ஈற்றில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வெற்றி பெற்று சாம்பியன் கிண்ணத்தைப் பெற்றது

இப்போட்டிகள் அனைத்தும் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (வி)

## தொண்டமனாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கிய இராணுவத்தினர் தொண்டமானாறு பாலததடியிலுள்ள பல வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவ்வீடுகளிருந்துஇராணுவத்தினர் வெளியேறுதவாறு விடுதலைப்புலிகள் பலத்த கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வல்வை முகாமிலிருந்து தொண்டமனாறு நோக்கிச் சென்ற இராணுவத்தினர் வீதியில் சந்தித்த பலரை கைது செய்து கொண்டே தொண்டமனாறு சென்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட அனைவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இதேவேளை தொண்டமனாறு வீடுகளில் தஞ்சமடைந்திருந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் விடுதலைப் புலிகள் தரப்பில் மூவர் காயமடைந்ததாகத் தெரிய வருகிறது.

இச்சமபவத்தின் போது து. இரசா என்னும் 21 வயது இளைஞன் இராணுவத்தினரின் துபபாக்கிச் சூட்டிற்குப் பலியாகியுள்ளார்

இது இவ்வாறிருக்க நேற்றுக் காலை ஹெலிகொப்டர்கள் தொண்டமனாறுப் பகுதியை சுற்றி வட்டமிட்டு துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் இருந்தன. (ஒ)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

சங்குவேலி இந்துமன்றமும் சங்குவேலி தமிழ்க் கலவன் பாடசாலையும் இணைந்து நடாத்திய சமய அறிவுப் போட்டிகளின் முடிவுகள்: செல்விகள்: ம. அமலா [5ம் வகுப்பு] நா. லே ஜினி [4ம் வகுப்பு] ம. தாரணி [3ம் வகுப்பு] த. திருச்செல்வி (2ம் வகுப்பு] இ விஜயராணி, [பாலர் மேற்பிரிவு] வ. வருஜிதா [பாலர் கீழப்பிரிவு]

## யாழ் மாவட்டத்துக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கிளிநொச்சி மன்னார், வவனியா. முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு தலா 25 லட்சம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. (மா)

## ஹெலியிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பறந்து சென்று திருநெல்வேலிப் பகுதியை வட்டமிட்டு பெரிய அளவிலான துண்டுப் பிரசுரங்களை வீசின. (மா)

## வடமராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நேரடியுத்தத்தில் இராணுவத்தினர் தரப்பில் பலர் படுகாயமடைந்தாகவும் விடுதலைப்புலிகள் தரப்பில் இருவர் காயமுற்றதாகவும் அறிக்கை ஒன்று கூறுகிறது.


மிது வீடியோ மூவீசாரின்
நேற்றைய சிறப்பு வெளியீடு

நீங்கள் நீண்ட நாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த தென் இந்திய அனைத்து திரைப்படநட்சத்திரங்களும் ஒன்றிணைந்து பங்குபற்றிய மாபெரும் கலைநிகழ்ச்சியாகிய

நடிகர் திலகம்
★ பொன் விழா ★

தயாரித்து வழங்குபவர்
மக்கள் கலைஞர்
ஜெய்சங்கர்

மிது வீடியோ மூவீஸ்
பிரதான வீதி, சித்தன்கேணி.
[A 2875]

NPTA. Benevolent Fund
(Incorporated by Parliament Act. No. 18 of 1968)
வடமாகாணஆசிரியசங்க சகாய நிதி
வெள்ளி விழா

நேரம்: மு. ப. 9-30 காலம்: 16-11-1986
ஞாயிற்றுக்கிழமை
இடம்: யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

பிரதமவிருந்தினர்:
திரு இரா. சுந்தரலிங்கம்
கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்-

தயவு செய்து இந்த அழைப்பினை ஏற்று தவருது சமூகமளிக்கும வண்ணம் சகாயநிதி செயற்குழுவின் சார்பில் அன்புடன் அழைக்கின்றோம்.

P. S குமாரசுவாமி, தலைவர்.
இ. மகேந்திரன், கௌரவசெயலாளர்.
S. சிவசுப்பிரமணியசர்மா, பொருளாளர்.

(C 5776)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வெள்ளிக்கிழமை 14-11-86

## புதிதாக 17 பொலிஸ் சுப்பிறின்டென்கள்

கொழும்பு வியாழன்

பொலிஸ் திணைக்களத்தில் உதவிப் பொலிஸ் சுப்பிறின்டன்கள் 17 பேர் உடனடியாக பொலிஸ் சுப்பிறின்டன்களாக பதவி உயர்த்தப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (கி)

## 'இன்றைய தினம் லீவு வழங்கலாம்'

யாழ்ப்பாணம், வெள்ளி

சமய நிகழ்ச்சிகளுக்காக ஐப்பசி இறுதி வெள்ளியான இன்றைய தினம் பாடசாலைகளுக்கு லீவு வழங்க விரும்பும் அதிபர்கள் லீவு வழங்கலாம் என்றும் அதற்காகப் பிறிதொரு நாள் பாடசாலையை நடத்தலாம் என்றும் யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் தெரிவித்தார். (எ)

### போராளிகள் கைதானதைச் சாதகமாகப் பயன்படுத்தி

# ஜனாதிபதி ஜயவர்த்தன வடக்கில் ஆயுத போராட்டத்தை அதிகரிக்கக்கூடாது”

புதுடில்லி, நவ 13

வடக்கு மாகாணத்தில் ஆயுதப் போராட்டத்தை அதிகரிப்பதற்கெதிராக ஜனாதிபதி ஜெயவர்த்தன அறிவுறுத்தப்பட்டுள்ளார். சென்னையில் தமிழ்ப் போராளிகள் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆயுதப்போராட்டத்தை அதிகரிப்பதற்கு அவர் முற்படக்கூடாதென கடந்த 11ம் திகதி வெளிவந்த 'ரைம்ஸ் ஒப் இந்தியா' பத்திரிகையில் யு.என்.ஐ செய்திஸ்தாபனத்தை மேற்கோள் காட்டிச் செய்தியொன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

இப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில் குறிப்பிடப்பட்ட இந்த அறிவுறுத்தல் ஜனாதிபதி ஜெயவர்த்தனவிற்கு முறையான ராஜதந்திர வட்டாரங்களூடாக அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் அடைபட்டுக் கிடக்கும் சிங்கள இராணுவத்தினர் வெளியே நடமாடும் வகையில் பெரும்பான்மைச் சிங்களச் சமூகம் ஜனாதிபதி ஜெயவர்த்தனவை இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தலாமென புதுடில்லியில் கருதப்படுகிறது.

இதேவேளை 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' தனது ஆசிரிய தலையங்கத்தில் தமிழ்ப் போராளிகள் மீது தமிழ் நாட்டு அரசு மேற்கொண்ட நடவடிக்கையையும் புதுடில்லியின் அங்கீகாரமும் தேவைக்கு அதிகமானவை என கருத்துத் தெரிவித்துள்ளது. இலங்கை அரசாங்கம் இந் நடவடிக்கையால் மாநில சுயாட்சி கோரி போராட்டம் நடத்தும் தமிழ் மக்களுக்கு அளித்து வந்த ஆதரவை இந்தியா வாபஸ் பெற்றுள்ளதாக கருதுவதற்கு இடமளிக்கக் கூடாதெனவும் ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது:

தமிழ் போராளிகள் மீதான நடவடிக்கையில் இந்திய அரசாங்கம் இலங்கை இனப் பிரச்னைக்கு ஒரு அரசியல் தீர்வு காண்பதிலிருந்து தான் விலகிக் கொள்ளவில்லை என பல வகையாலும் தெளிவுபடுத்தியுள்ள போதிலும் இந் நடவடிக்கை தமிழ் போராளிகளை தமது கோரிக்கைகளை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பலவந்தம் என்று திரித்துக் கூறுவதற்கு இடமளிக்கக் கூடாதெனவும் ஆசிரியர் தலையங்கம் குறிப்பிட்டுள்ளது. (கே)

## க.பொ.த விசேஷ பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இடம் பெயர்ந்த க.பொ.த (சாதாரணம்) மாணவர்களுக்கு அண்மையில் நடைபெற்ற விசேட பரீட்சையின் பெறுபேறுகள் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கத்தினால் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் இன்றும் நாளையும் மாணவர்கள் கல்வித் திணைக்களத்தில் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### அச்சுவேலிப் பகுதியில்

## ராணுவ ஷெல் தாக்குதலால் மக்கள் வெளியேற்றம்

(நமது நிருபர்)

அச்சுவேலிப் பகுதியை நோக்கி தொண்டமனாறு இராணுவ முகாமிலிருந்து தொடர்ச்சியாக ஏவிவிடப்படும் பயங்கர ஷெல் தாக்குதலால் இப்பகுதியிலுள்ள மக்கள் தங்கள் வீடுவாசல்களை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

'ஆட்டலறி' என்றழைக்கப்படும் இந்த ஷெல்கள் வீடுகளில் விழுந்து வெடித்துப் பெரும் சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன.

உயிராபத்து ஏற்படுமென அஞ்சி மூட்டை முடிச்சுகளுடன் நேற்று மாலை மக்கள் குடும்பம் குடும்பமாக வெளியேறிக் கொண்டிருந்ததைக் காணக் கூடியதாயிருந்தது.

நேற்று பகல் பூராகவும் ஹெலிகொப்டர்கள் அச்சுவேலிப்பகுதிமேல் வட்டமிட்டவண்ணமிருந்தது இடையிடையே துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன.

காங்கேசன்துறை கடல்பகுதியிலிருந்து பீரங்கிவேட்டுகள் முழங்கின.

வசாவிளான் முகாமிலிருந்தும் ஷெல்கள் ஏவிவிடப்பட்டன. (மா)

### இந்த அரசின்

# 9 வருடகால ஆட்சியில் கடன்பளு அதிகரித்துள்ளது

— லக்ஷ்மன் ஜெயக்கொடி

கொழும்பு வியா

"இந்த நாட்டை கடந்த ஒன்பது வருடகாலமாக ஆட்சிசெய்து வரும் ஐ.தே கட்சி அரசாங்கம் பொருளாதாரத்துறையில் எந்தவித மான முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை அபிவிருத்திக்கென வெளிநாடுகளில் இருந்து பல கோடி ரூபா கடன் பெறப்பட்டபோது அவை அந் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாது வேறு செலவீனங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் பளு, உச்சியின் கோபுரத்தை அடைந்துள்ளது

அரசாங்கத்தின் 10 வது வரவு செலவுத்திட்டத்தின் 2ம் வாசிப்பு மீதான விவாதத்தை நேற்று பாராளுமன்றத்தில் ஆரம்பித்து வைத்து பேசிய அத்தனகலை எம்.பி திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி இவ்வாறு கூறினார்

இவ் விவாதத்தில் மேலும் பேசுகையில்,

1977ம் ஆண்டுவெளிநாட்டுக் கடன் ஆறாயிரம் கோடி ரூபாவாக இருந்தது ஆனால் 1985ம் ஆண்டு இக்கடன் ஐயாயிரம் கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது இந்நாட்டின் தேசிய வளங்களை சரியானமுறையில் பயன்படுத்தத் தவறியமையால் தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

அரசாங்கத்தின் சார்பில் இவ் விவாதத்தில் கலந்து கொண்டு தேசிய தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி 1977ம் ஆண்டு இந்நாட்டின் பாதுகாப்புச் செலவீனம் 96 கோடியே 90 லட்சம் ரூபாவாக விருந்ததாகவும், அடுத்த ஆண்டு 1600 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது என்றும், நாட்டின் சுதந்திரத்திற்கும், இறைமைக்கும் அச்சுறுத்தல் தோன்றியுள்ள இவ்வேளையில் இவ்வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்த நிதி அமைச்சருக்கு நன்றி கூற வேண்டும் என்று கூறினார். (வா)

## எம். ஜி. ஆர். — பிரபா 90 நிமிட பேச்சுவார்த்தை

சென்னை, நவ 13

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே பிரபாகரனும் கலாநிதி பாலசிங்கமும் கடந்த செவ்வாய் கிழமை தமிழக முதல்வர் எம். ஜி ராமச்சந்திரனைச் சந்தித்து 90 நிமிடமாகப்பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

கடந்த 8ம் திகதி சென்னைப் பொலிஸரால் தாங்கள் கைது செய்யப்பட்டு சாதாரண குற்றவாளிகள் போல் தம்மை நடத்தியது குறித்து எம்.ஜீ.ஆரிடம் முறையிட்டார்கள்.

இதேவேளை போராளிகள் கைதுசெய்யப்பட்ட சம்பவமானது தமிழ்மக்களின் மனதில் ஆறுதலடுவை ஏற்படுத்திவிட்டதாக ஈரோஸ் தலைவர் பாலகுமார் தெரிவித்துள்ளார். (ஓ)

### 'விஜி' கடத்தலைக் கண்டித்து

## பல்கலைக்கழக மாணவர் உண்ணாவிரதம்

நல்லூர், வெள்ளி.

யாழ்ப்பாண பல்கலைக்கழக 3ம் வருட வர்த்தக பீட மாணவன் விஜிதரன் கடத்தப்பட்டதைக்கண்டித்து நேற்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

யாழ். பல்கலைக்கழக வளவுக்குள் ஆரம்பமான உண்ணாவிரதப் போராட்டத்தில் முதல் கட்டமாக 30 மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

இது இவ்வாறிருக்க இம் மாணவன் கடத்தப்பட்டதைக் கண்டித்து விஞ்ஞான ஆசிரியர் சங்கம் பின்வரும் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

விஜிதரன் காணமல் போனது அமைதியை குழப்பும் ஒரு சம்பவம் ஆகும்: இச்சம்பவம் தொடர்பாக மாணவ சமுதாயத்தின் நியாயமான, ஆழ்ந்த கவலையில் நாமும் பங்கு கொள்கிறோம். அத்துடன் நிர்வாகம் சார்பாகத்துணைவேந்தர் விடுத்த அறிக்கையுடன் உடன்படுகிறோம் மேலும் விஜிதரனின் பெற்றோர்களின தும தூர இடங்களிலிருந்து வந்து இங்கு கல்வி கற்கும் மாணவர்களினதும் கவலையிலும் நாம் பங்கு கொள்கிறோம். அவர்களின் நலன்களில் அக்கறை காட்டுவது பல்கலைக்கழக நிர்வாகத்தினதும் விரிவுரையாளர்களினதும் கடமையாகும்.

அவர் காணமல் போனது தொடர்பான தகவல் தெரிந்தவர்களிடம், அம்மாணவன் பாதுகாப்பாக திரும்புவதற்கு உடனடியாக உதவுமாறும், இதன் மூலம் யாழ்ப்பாணத்தின் நற்பெயரை நிலைநிறுத்துமாறும் வேண்டுகிறோம்

மாணவர்கள் மனதில் வளர்க்கும் எதிர்கால குறிக்கோளும், உயர்ந்த நோக்கங்களும், கல்விபயில்தலைத் தொடர்ந்தால் மட்டுமே நல்ல பலனைத்தரும். அத்துடன் பல்கலைக்கழகமும் தனது மதிப்பை தொடர்ந்து பேணக் கூடியதாக இருக்கும் கல்வி பயிலுதலைக்குறுக்கீடு செய்யாதவாறு, மாணவர்கள் அறிவுபூர்வமான முடிவுகளை தமது நியாயமான கோரிக்கைகள் தொடர்பாக எடுக்குமாறு நாம் வேண்டுகிறோம்"

## நாளை பாராட்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் இலக்கிய வட்ட உறுப்பினர்களான சசிபாரதி சு. சபாரத்தினத்தின் பத்திரிகைச் சேவையினையும் நா. சுப்பிரமணிய ஐயர் கலாநிதிப் பட்டம் பெற்றமையையும் கௌரவிக்குமுகமாகபாராட்டு விழா வைபவம் ஒன்று நாளை சனிக்கிழமை மாலை நல்லூர் இந்து விடுதியில் நடைபெறவுள்ளது.

செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் புலவர் பார்வதிநாதசிவம் மயிலங்கூடலூர் நடராஜன், கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை, சொக்கன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (ஊ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126

### விஜிதரன் மறைவு

## "வடக்கு - கிழக்கு பிரிவுக்கு பயன்படுத்தப்படலாம்"

### கிழக்கு பல்கலைக்கழக மாணவர் அமைப்புக் குழு

யாழ்பாணம், வெள்ளி

யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் மர்மமாக காணமல் போயிருப்பதை சில பிறம்பாக்குவாதிகள் தமக்கு சாதகமாய் பயன்படுத்தலாம். அதாவது, வடக்கு கிழக்கு பிரதேசங்கள் இன்று இணைய வேண்டிய சூழ்நிலையில் அதனைப் பிரிக்க விஜிதரன் விடயத்தைப் பயன்படுத்தலாம்."

இவ்வாறு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் அமைப்புக் குழு விடுத்துள்ள அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

"தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில், இச்சம்பவம் நடந்திருப்பது மிகவும் கவலைக்குரியது. நிகழ்கால எதிர்கால புரிந்துணர்வுகளையும் ஒற்றுமையையும் அடிப்படையாக கொண்டு, அவரை எவ்வித நிபந்தனையின்றி விடுதலை செய்யவும்."

## போராளிகளை விடுதலை செய்யக்கோரி உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனையும் ஏனைய போராளிகளையும் தடுப்புக் காவலிலிருந்து விடுவிக்குமாறு கோரி ஆனைக்கோட்டை முத்துமாரியம்மன் கோயிலிலும், நவாலி சென். பீற்றஸ் தேவாலயத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்

மானிப்பாய் தொகுதியிலுள்ள பாடசாலை மாணவர்கள் பகிஷ்கரித்து உண்ணாவிரதத்திற்கு தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

இந்த உண்ணாவிரதத்தை ஒட்டி இங்குள்ள வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. (ஓ)

## சிறப்புரை

யாழ்ப்பாணம், சனி

யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் உயர்தரமாணவ மன்ற சிறப்புக்கூட்டம் எதிர் வரும் 17ம் திகதி திங்கட்கிழமை செல்வன் க. அருந்தவராஜா தலைமையில் நடைபெறும்.